முகவர் தபால்
தொலைத்தொடர்புகளுக்கு
நம்பிக்கையான
ஒரே இடம்:
மிதுஷா
புகையிரத நிலைய வீதி,
வவுனியா.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

24 மணி நேர
தொலைத்தொடர்பு
சேவைகளுக்கு
நம்பிக்கையான இடம்:
மிதுஷா
புதிய பஸ் நிலைய
கட்டடம்,
வவுனியா.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 02 திங்கட்கிழமை (14 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 79

## ஆயர் கெனத் குழுவினர் இன்று கொழும்பு திரும்புவர்

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்ப்பாணம் வந்திருந்த அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோ குழுவினரும், மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் அருட் கலாநிதி கிங்ஸ்லி முத்தையா குழுவினரும் இன்று கொழும்பு திரும்பவிருக்கிறார்கள்.

குடாநாட்டில் பல பகுதிகளிலும் பிரார்த்தனைகளை நடத்திய இவர்கள், விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்கள் நடத்தியிருந்தனர். (உ-3)

## தமிழரின் ஏகப் பிரதிநிதியாக புலிகளை அங்கீகரிக்கிறோம்

### ஆயர் கெனத் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

''தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை நாம் அங்கீகரிக்கிறோம்''.

— இவ்வாறு நல்லெண்ண முயற்சிகளை மேற்கொண்டு யாழ். வந்துள்ள அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோ 'புலிகளின் குரல்' வானொலிக்குத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் சார்பில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசர் இலங்கைக்கு அடுத்த ஜனவரியில் விஜயம்

பாப்பரசர் இரண்டாது அருளப்பர் சின்னப்பர் அடுத்த ஆண்டு ஜனவரி 20, 21 ஆம் திகதிகளில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றார்.

இத்தகவலை வெளியுறவு இராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கா வெளியிட்டார்.

ஜனாதிபதி விஜேதுங்கா இது தொடர்பாக விடுத்த அழைப்பை இலங்கை அரச அதிகாரிகள் இருவர் அண்மையில் பாப்பரசரிடம் கையளித்தனர் என்றும் அவர் கூறினார்.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் தாம் பிலிப்பீன்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளும் வேளையில் இலங்கைக்கும் தாம் பயணம் மேற்கொள்ளவிருப்பதாக பாப்பரசர் விருப்பம் தெரிவித்ததை அடுத்து இலங்கை ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்திருக்கிறார்.

இலங்கை விஜயத்தின் போது இலங்கையின் மறைப் போதகரான காலஞ்சென்ற யோசப் வாஸ் என்னும் கத்தோலிக்கக் குருவை பாப்பாண்டவர் வணக்கத்துக்குரிய நிலைக்கு உயர்த்துவார் என்றும் —

இச்சிறப்பு நிகழ்ச்சி கண்டி அல்லது கொழும்பில் இடம் பெறும் என்றும் திரு அமரதுங்க தெரிவித்தார். (உ-ஏ)

# சகல கட்சிகளும் இணங்கினால் விடுதலைப் புலிகளுடன் பேசலாம்

## ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 14

நாட்டின் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு நான் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் பேசுவதாயின் சகல கட்சிகளும், பெரும்பான்மை இனமும் ஒன்று சேர்ந்து அது குறித்து முடிவு செய்ய வேண்டும்.

— இவ்வாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறியிருக்கிறார்.

மாத்தளை பேர்னாட் அலுவிகாரை விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மாநாடு ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த வருடம் டிசம்பர் 31 இற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலும் —

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கோவாவுக்குள் வைத்து பற்றரி கடத்தியவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 14

கோவாவுக்குள் பற்றரியை மறைத்து வைத்து வடபகுதிக்குக் கடத்த முயன்ற வியாபாரி ஒருவர் தாண்டிக்குளம் இராணுவ நடைமுகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

மேற்படி நபர் கொண்டு வந்த கோவாவின் வடிவத்தைப் பார்த்து சந்தேகப்பட்ட படையினர் அதனை சோதனை செய்த போது அதனுள் இருந்து பற்றரிகள் விழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து வியாபாரி படையினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார். (த-1)

## அரியாலையில் வீழ்ந்த மண்டைதீவு ஷெல்!

யாழ்ப்பாணம், பெப். 14

நேற்று அதிகாலை 1 மணியளவில் மண்டைதீவுப் பகுதியில் இருந்து ஏவிவிடப்பட்ட ஷெல் வீச்சிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் பிள்ளைகளும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

மேற்படி ஷெல்களில் ஒன்று அரியாலைப் பகுதி மைதானம் ஒன்றில் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது. மற்றைய ஷெல் ஒன்று இதற்கு அண்மையில் உள்ள வீடொன்றின் படுக்கை அறைச் சுவரில் விழுந்து வெடித்தது. எனினும் அங்கு உறங்கிக் கொண்டிருந்தவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர். [உ-30-162]

## கற்பிட்டி மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும்!

### படையினர் தரப்பில் உறுதிமொழி

கொழும்பு, பெப். 14

கற்பிட்டித்தீவிலும், கற்பிட்டித்துறைமுகத்தின் இடையில் இருந்து 5 மைல் தூரத்திலும் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் கடற்றொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும்.

பாதுகாப்புப் படையினர் இவ்வாறு உறுதிமொழிகளை வழங்கியுள்ளனராம்.

இதேவேளை பகல்வேளையில் கடற்றொழிலில் ஈடுபடும் படியும் மீனவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கடற்றொழில் நீர்வள அமைச்சர் மைக்கல் ஜோசப் பெரேரா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் பி. எச். எல். கலபதி, கடற்றொழில் துறை அதிகாரிகள், கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கற்பிட்டி மீனவர்களின் மீன்பிடிப் படகுகள், இயந்திரங்கள், அவர்கள் கொண்டு செல்லும் டீசல் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் ஆகியவை அடிக்கடி கொள்ளையிடப்பட்டு வருவது குறித்து பொலீஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ-த]

## யுத்தத்தினால் புலிகளை பலவீனப்படுத்தி விட முடியாது

### கொழும்பில் ஆரியரத்னா பேட்டி

கொழும்பு, பெப். 14

யுத்தத்தின் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்த முடியாது.

— இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய சர்வோதயத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்னா பி பி.ஸி சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

தாங்கள் போரையல்ல சமாதானத்தையே விரும்புவதாகப் புலிகள் என்னிடம் தெரிவித்தனர். ஆயுதங்கள் மூலமல்லாது பேச்சுக்கள் மூலம் நியாயமான தீர்வு காணவே அவர்கள் ஆவலாயுள்ளனர். இதனையே அரசிடம் தெரிவிக்கும்படி நான் கேட்டுக் கொள்ளப்பட்டேன்.

கேள்வி:- புலிகள் முதலில் பேச்சுக்கு வந்து விட்டு பின் போருக்குத் திரும்பி விடுவர் என்று தெற்கில் சிலர் கருதுகின்றனரே?

பதில்:- இரு பக்கத்திலும் இத்தகைய நம்பிக்கையின்மை நிலவுகிறது. இரு பகுதியினரிடையேயும் பிரசாரத்தின் அடிப்படையிலான தொடர்பு மட்டுமே உள்ளது.

[5 ஆம் பக்கம் பார்க்க]

## கடவுச்சீட்டு மோசடிகளைத் தடுக்க

## கனடா, ஜேர்மன், டச்சு அதிகாரிகள் கொழும்புக்கு!

கனடா, ஜேர்மன், நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கு கடவுச்சீட்டு மற்றும் பயண ஆவணங்களில் மோசடி செய்து இலங்கையர்களை அனுப்பும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் குறித்து ஆராய இந்நாடுகளின் பிரதிநிதிகள் குழு ஒன்று வரவிருக்கிறது. கனடா பிரஜாவுரிமை குடிவரவு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் றொனிஸ் ஜோன்சன் தலைமையிலான இக்குழுவில் ஜேர்மன் எல்லைக் காவல் பொலீஸ் பணிப்பாளர் நேதமட் சொப்பிக், நெதர்லாந்தின் நீதி அமைச்சின் பிராந்திய பணிப்பாளர் றாகிக் கீப்டா, சர்வதேச விமானப் போக்குவரத்து முகாமையாளர் றொபேர்ட் நிகெல்சன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். [உ-3]

## பொஸ்னியாவில் பணயம் வைக்கப்பட்ட இலங்கையர்

ஜெனிவா, பெப். 14

பொஸ்னியாவில் அகதிகளுக்கான ஐ. நா. ஆணைக் குழுவின் ஊழியராக பணியாற்றிவரும் இலங்கையரான சட்டத்தரணி இந்திகா ரத்வத்தை நான்கு தினங்கள் பொஸ்னிய - சேர்பியப் படைகளினால் கைது செய்யப்பட்டு பணயம் வைக்கப்பட்டிருந்த பின்னர் விடுதலை செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

வெளியுறவு அமைச்சர் சாகுல்ஹமீதின் தலையீட்டை தொடர்ந்தே அவர் விடுதலை செய்யப்பட்டார் என்று 'லங்காபுவத்' அறிவித்தது.

திரு. ரத்வத்தை தற்சமயம் சாக்ரேப் நகருக்குச் சென்றுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

சேர்பியா மற்றும் மொன்ரோநிக்ரோ நாடுகளில் இருந்து அமெரிக்க ராஜதந்திரிகளின் உறவினர்களை உடனடியாக வெளியேறும்படி அமெரிக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது.

பொஸ்னியாவில் உள்ள செர்பிய இராணுவ நிலைகள் மீது விமானத் தாக்குதல்களை நடத்துவதற்கு நேட்டோ இராணுவ அணி காலக்கெடு விதித்துள்ளதைத் தொடர்ந்தே இந்த உத்தரவை வாஷிங்டன் அரசு பிறப்பித்துள்ளது.

வெளியேறும் அமெரிக்கப் பிரஜைகளை வீதி மூலம் ஹங்கேரி நாட்டின் தலைநகர் புடாபெஸ்டுக்கு நேற்று அழைத்துச் செல்வதற்கு அமெரிக்க அதிகாரிகள் ஒழுங்கு செய்திருந்தனர்.

## ஆளுநருடன் மோதல் வலுக்கிறது

## ஜெயலலிதா அரசுக்கு நெருக்கடி சமாளிக்க புதுடில்லி விரைகிறார்

சென்னை, பெப். 14

தமிழக ஆளுநருக்கும், முதலமைச்சருக்கும் இடையிலான மோதல் உச்சக் கட்டத்தை அடைந்து அதனால் தமிழக மாநில அரசு கலைக்கப்படலாம் என்ற பேச்சு அடிபடத் தொடங்கியிருக்கும் இவ்வேளையில் —

இந்திரா காங்கிரஸுடன் மீண்டும் உறவுகளைப் புதுப்பிக்கும் முயற்சியாக அ. தி. மு. க. பொதுச் செயலாளரும் முதலமைச்சருமான ஜெயலலிதா இன்று மாலை புதுடில்லி செல்கிறார்.

மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைவரம் குறித்து பிரதமர் நரசிம்மராவுடன் பேசவும் —

தமது ஆட்சி கலைக்கப்படாமல் இருக்கும் வகையில் இந்திரா காங்கிரஸுடன் உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளும் வாய்ப்புகளை ஆராயவும் —

ஜெயலலிதா புதுடில்லி செல்வதாக பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

இதேவேளை —

ஆளுநர் சென்னாரெட்டி,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் மீது அமெரிக்கா பொருளாதாரக் கட்டுப்பாடு

ஜப்பான் நாட்டின் மீது பொருளாதாரக் கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து அமெரிக்கா ஆலோசித்து வருகிறது.

அமெரிக்க அரச உயர் அதிகாரிகளை மேற்கோள் காட்டி ''வாஷிங்டன் போஸ்ட்'' பத்திரிகை நேற்று இத்தகவலை வெளியிட்டுள்ளது

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டனுக்கும், ஜப்பானியப் பிரதமர் மொறி ஹிரோ ஹொஸகாவாவுக்கும் இடையே வாஷிங்டனில் நடைபெற்ற — இரு நாடுகளுக்கும் இடையேயான — பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் தோல்வியடைந்ததை அடுத்தே அமெரிக்க அரசு இந்த முடிவை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பகிஷ்கரித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமாம்!

# கிழக்கில் தேர்தல் தினத்தன்று தமிழ் வாக்காளர் கைதாவர்?

யாழ்ப்பாணம், பெப். 14

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் தினத்தில் தமிழ் மக்களில் வாக்களிக்கக் கூடியவர் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்படுவர் எனவும் —

பின்னர் அவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படுவர் என்றும் —

ஸ்ரீலங்கா அரசபடைகள் மக்களை எச்சரித்து வருகின்றனர்

வாக்களிக்க செல்லாத தமிழ்மக்கள் அனைவரையும் தாம் பிடித்துச் செல்லப் போவதாகவும் —

ஸ்ரீலங்கா அரச படைகள் வீடு வீடாகச் சென்றும், ஒலிபெருக்கிகள் மூலமும் அறிவித்து வருகின்றனர்.

இதேவேளை —

தங்களை ஆதரிக்கும்படி வேட்பாளர்கள் என்று கூறிக் கொண்டு சிலரும், வேறு சிலரை அரச சார்பான வேட்பாளர்கள் என்று கூறிக் கொண்டு அரச படைகளும் அச்சுறுத்தல் பாணியிலான தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனராம்.

வாக்களிக்காமல் இருக்க எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் —

வாக்களிப்பில் அலட்சியப் போக்கு அவதானிக்கப்படின் அந்தந்தப் பகுதிகள் மீது நாளடைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் — அரச படைகள் மக்களை அச்சுறுத்தியுள்ளன என்றும் [illegible] (உ-3)

## முச்சந்தி முரளி



அப்ப... படகு அணியிலை [illegible]

## வலிவடக்குப் பகுதியில் நேற்று விமான, ஹெலித் தாக்குதல்

வலிகாமம் வடக்கு பகுதியில் ஷெல் மற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் இரவு 8மணி முதல் 11மணி வரையும் பின்னர் நேற்றுக் காலை 5 30 மணியளவிலும் பலாலி இராணுவ முகாம் பகுதியிலிருந்து சரமாரியாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்த ஷெல்கள் அளவெட்டி, மல்லாகம், வீமன், ஏழாலைப் பகுதிகளில் தோட்ட வெளிகளிலும் பனங்காணிகளிலும் விழுந்து வெடித்தன.

பின்னர் நேற்றுக் காலை 8 மணி முதல் நண்பகல் வரை கட்டுவன், ஏழாலை மற்றும் வயாவிளான், தோலாவரைப் பகுதிகளை நோக்கி ஷெல் வீச்சு இடம்பெற்றது நிலாவரைப் பகுதியில் துப்பாக்கி வேட்டுக்களும் தொடர்ந்து தீர்க்கப்பட்டன.

நேற்று நண்பகல் 11 30 மணியளவில் புன்னாலைக்கட்டுவன், ஈவினை —சந்திரபுரம் பகுதிகளை வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் ஒன்று 50 கலிபர் தாக்குதல்களை நடத்தியது இறொகட் தாக்குதல்களையும் ஹெலி மேற்கொண்டது.

தொடர்ந்து 11 30 மணியளவில் அப்பகுதியை வட்டமிட்ட ''பொமார்செட்டி'' குண்டு வீச்சு விமானம் ஏழு தடவைகள் அப்பகுதியில் குண்டுகளை வீசியது

இத்தாக்குதல்களினால் பல வீடுகள் சேதமுற்றிருக்கலாம் எனக் கருதப்பட்டது.

(உ-8-11 18-72-69)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## நம்புவது எப்படி?

பொது வாழ்வுக்குத் தேவையான நீதி நெறியை, நியாயமான அளவுக்கு மதிப்பதற்கு அரசாங்கம் தவறும் பட்சத்தில், இனப்பிரச்சினைக்குத் தீர்வே கிடையாது. தீர்வுக்குப் பதிலாக நாடு சிதறுண்டு போகும்.

பிலிப்பீன்ஸில், ஸ்ரீலங்காவின் தூதுவராகப் பணியாற்றியஜனாப் இலத் ஹூசெயின் தெரிவித்த இந்தக் கருத்தை கொழும்பு அரசாங்கம் காதில் போட்டுக் கொள்ளுமா என்பது சந்தேகமே.

இனத்துவேசப் போதை தலைக்கேறியவராக, ஜனாதிபதி விஜேதுங்கா நாட்டில் இனப்பிரச்சினை என ஒன்றில்லை என்று நிலைநாட்ட முயல்கிறார். இனப் பிரச்சினையின் பரிமாணத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளும் அரசியல் முதிர்ச்சி அவருக்கு இல்லை என்பதே அதன் அர்த்தம்.

இனப்பிரச்சினை என ஒன்றில்லாவிடில், நாட்டின் இத்தனை தகராறுகளும் உண்டாகி, இரத்த ஆறு ஓடுமா? நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பகுதி போருக்காக விரயமாகுமா என்பதனைக் கூட அவரால் பகுத்துணர முடியவில்லை!

அத்தகைய ஒருவரால் பிரச்சினையின் தார்மீக அம்சத்தை விளங்கிக் கொள்ள முடியும் என எதிர்பார்ப்பது வீணானதாகும். சிறுபான்மையினர் என்றால் அவர்கள் மக்கள் அல்லர்; உரிமைகளுடன் வாழ்வதற்கு தகுதியற்றவர்கள் என்பது போலவே அவரது சிந்தனை ஓட்டம் அமைந்திருக்கிறது.

தாமே மீண்டும் ஜனாதிபதியாகிவிட வேண்டும் என்ற ஆசையினால் அத்தகைய சிந்தனை அவருக்கு உதித்திருக்கலாம். ஆனால் பொது நீதியை மதிக்கவும், அவற்றைக் கடைப்பிடிக்கவும் அவரும், அவரைச் சார்ந்தவர்களான அரசினரும் மறுப்பது நாட்டின் எந்தப் பிரச்சினையையுமே தீர்க்க வல்ல ஆற்றல் அவர்களிடம் இல்லை என்பதனையே எடுத்துக் காட்டுகிறது.

விஜேதுங்கா அரசாங்கம் மட்டுமன்றி, இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் அனைத்துமே இனப்பிரச்சினையின் முழுப் பரிமாணத்தையும் அறிந்திருக்கவில்லை.

அதனால்தான் சிங்கள ஆட்சித் தலைவர்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தமிழ்த் தலைவர்களை ஏமாற்றிவிட்டால் பிரச்சினையிலிருந்து தப்பிக் கொள்ளலாம் என எண்ணினர். தமது பதவிக் காலத்தில் அந்தத் தொல்லையிலிருந்து விடுபட்டுவிட்டால் போதும் என்றவாறு செயற்பட்டனர்.

அவர்களது அந்தத் தவறான எண்ணத்தாலும், ஏமாற்று நடத்தைகளாலுமே தமிழர்களுக்கு அவர்கள் மீது இருந்த நம்பிக்கை அற்றுப் போயிற்று. இந்தத் தொடர் ஏமாற்று வினையின் விளைவே இன்றைய பாதிப்பு என்பதனை சிங்கள ஆட்சியாளர்கள், ஏனோ, இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு என்றதும் அவர்களை நம்ப முடியுமா என்று சிங்கள அரசியல்வாதிகளும், தென்னிலங்கைப் பத்திரிகையாளரும் உடனே கேள்வி எழுப்புகின்றனர். சிங்களத் தலைவர்களை தமிழர்கள் நம்புவார்களா என்ற கேள்வியை அவர்கள் தமக்குள்ளாவது கேட்டுப் பார்க்கவேண்டும்.

தென்னிலங்கை மக்கள் சம்பந்தப்பட்ட பல விவகாரங்களிலேயே இன்றைய அரசு அப்பகுதி மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவில்லை. பொது நீதி நெறிகளை மதிக்கவில்லை; செயலாக்கவில்லை.

அவ்வாறிருக்க இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழர் நம்பிக்கை வைக்கும் வண்ணமும், பொது நீதி நெறிகளை மதித்தும் செயற்படுவார்கள் என்று எதிர்பார்ப்பது அவலை நினைத்து வெறும் உரலை இடித்த கதையாகவே இருக்கும்.

## உற்சவம்

தெல்லிப்பழை துர்க்காபுரம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை நாளை செவ்வாய் முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நடைபெறும். மாசிமகப் பெருவிழா மறுநாள் 25 ஆம் திகதி இடம்பெறும்.

## இன்று

கோப்பாய் கோட்டத்தை சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று, இன்று திங்கள் பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

★ ★ ★

அராலி மேற்கு புங்கங்குளி நல்லொளி சனசமூக நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா இன்று திங்கள் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ் கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இடம்பெயர்ந்த — வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களில் இவ்வாண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ளவர்களுக்கு — யாழ். வட்ட லியோ கழகத்தினர் இன்று அப்பியாசக் கொப்பிகளை இலவசமாக வழங்கவுள்ளனர்.

★ ★ ★

மாகியம்பதி செட்டி சனசமூக நிலையத்தில் இன்று கோழிகளுக்கு நோய்த் தடுப்பூசி போடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-13]

## மலேரியா தடுப்பு மருந்து; விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

லண்டன், பெப். 14

மலேரியா வராமல் தடுப்பதை உறுதிசெய்யும் தடுப்புப் பால் (Vaccine) மருந்து ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனம் உலக வங்கி ஆகியவற்றின் நிதி உதவியுடன் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாகவே இத்தடுப்புப்பால் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

கொலம்பியா நாட்டில் இது தொடர்பான ஆராய்ச்சி நடத்தப்பட்டது.

மனித உடலில் மலேரியா பரவுவதைத் தடுக்கும் தன்மையைத் தூண்டுவதில் எப். இ. எப். (F.E.F 66) 66 என்று பெயரிடப்பட்டுள்ள இப்புதிய தடுப்புப்பால் மருந்து குறிப்பிடத்தக்க வெற்றியடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தான்சானியாவில் இம்மருந்து பரீட்சித்துப்பார்க்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இம்மருந்து பக்கவிளைவுகளை ஏற்படுத்தாது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (த-எ)

## இளங்கலைஞர் மன்ற இசை விழா

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14 ஆவது இசை விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று மாலை 4-30 மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

இன்றைய நிகழ்ச்சிகளில் மிருதங்க இசை, புல்லாங்குழல் இசை, வயலின் இசை, இசைக்கச்சேரி, கதகளி ஆடல் ஆகியவை இடம்பெறும். (த-111)

## நாளை

சுவாமி விவேகானந்தரின் அனைத்து மத மாநாட்டு உரையின் நூற்றாண்டுவிழாப் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை செவ்வாய் பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலையில் நடைபெறும். (த)

✶ ✶ ✶

திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச திட்டமிடல் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் யாழ் செயலக திட்டமிடல் பணிமனையில் நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பன்முகப் படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்டம் தொடர்பான இந்தக் கூட்டத்தில் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது. (உ-5)

## மகாஜன புதிய இடத்தில்

மயிலணி, பெப். 14

இணுவில் மத்திய கல்லூரியில் இதுவரை நாளும் இயங்கி வந்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இன்று முதல் மருதனார்மடம் சந்திக்கு அண்மையில் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளில் இயங்கவுள்ளது.

இன்று காலை 8 மணிமுதல் வகுப்புக்கள் புதிய இடத்தில் முழுமையாக இயங்கும் என கல்லூரி அதிபர் திரு. க. நாகராஜா தெரிவித்துள்ளார். (உ-89)

## குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், பெப். 14

செப்ரிசிமியா நோயின் தாக்கத்திற்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றும் ஒரு குழந்தை மரணமானது.

திருநெல்வேலியைச் சேர்ந்த சிவகுமாரன் கார்த்திகா (வயது 2) என்ற பெண் குழந்தையே நேற்று மரணமடைந்தது. (உ-15)

## சாரணர் வாரம்

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ். மாவட்ட சாரணர்களின் சேவை வாரம் இன்று திங்கள் முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 21 ஆம் திகதிவரை நடைபெறும்.

சாரணர்களின் இந்த சேவை வாரத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சாரண மாவட்ட ஆணையாளர் திரு. இ. மகேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-5)

## தமிழக காங்கிரஸ் எம்.பியை தாக்க அ.தி.மு.க. முயற்சி

சென்னை, பெப். 14

தமிழ்நாடு — கோவை நாடாளுமன்றத் தொகுதியின் இந்திரா காங்கிரஸ் எம். பியான கே. குப்புசாமி தம்மை ஆளும் அ. தி. மு. கவைச் சேர்ந்த இருவர் தாக்க முயற்சித்ததாகவும் — தம்மிடம் இருந்த பிஸ்டலினால் சுட்டு அவர்களைத் தாம் துரத்தியதாகவும் ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவுக்கு அனுப்பிய முறைப்பாடு ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

தமது தொகுதியில் தாம் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்ட சமயமே அத்தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத் தாக்குதல் முயற்சி தொடர்பாக கோயம்புத்தூர் பொலீஸார் இரண்டு நபர்கள் மீது வழக்கு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில்—

இச்சம்பவம் தொடர்பாக பி.கே. குப்புசாமி நேற்று திருப்பூரில் அவரது இல்லத்தில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டார் என்றும் —

கோவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-த-எ]

## ரூபா இரண்டரை கோடிக்கு நிவாரணப் பொருள்கள்

### மனித முன்னேற்ற நிலையம் தருவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென சுமார் இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் மனித முன்னேற்ற நிலையத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

மனித முன்னேற்ற நிலையத்தின் இயக்குநர் அருட்திரு எஸ். எச். ஜெபநேசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இவற்றில் உணவுப் பொருள்களுடன் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள், உபகரணங்கள் ஆகியனவும் அடங்கும்.

இப்பொருள்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

சகல கட்சிகளும.-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதைத் தொடர்ந்து இரு மாத காலத்திற்குள் நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் பெரும் பகுதியில் அமைதி நிலவுகிறது. அதனால் தான் வெளிநாட்டவர்களும் இங்கு முதலீடு செய்து வருகின்றனர்.

தமிழர்கள் எல்லோருமே பயங்கரவாதிகள் அல்லர். மக்கள் யாவரும் சமாதானத்தையே விரும்புகின்றனர் — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-9)

யுத்தத்தினால்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் கூறுவதை விசுவாசம் மிக்கதாகவே நான் கருதுகிறேன்.

எனவே பழமையைக் கிளறாமல் பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்ப முயற்சிப்போம்.

கேள்வி:- புலிகள் பலவீனப்படுத்தப்படும் போது சமாதான முயற்சிகளைச் செய்கின்றனர் என்று கருதப்படுகிறதே?

பதில்:- அப்படிக் கருத முடியாது அவர்கள் பலவீனப் படுத்தப்பட்டிருந்தால் அவர்களின் பகுதிகளை எம்மவர்களால் கைப்பற்றுவது சாத்தியப்பட்டிருக்குமே!

இத்தகைய கூற்றுக்கள் விடயம் தெரியாதவர்களால் கூறப்படுவது. அங்கு செல்லாமலும், காணாமலும் கூறப்படும் இத்தகைய கூற்றுக்களால் நிலைமை மோசமாகின்றது.

அங்கு காயமுற்ற சிப்பாயைப் பார்த்தேன். நல்ல முறையில் அவருக்கு சிகிச்சை அளிக்கிறார்கள்.

யாழ் செயலகத்துக்குச் சென்றேன் அது முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. ஒரேயொரு அறையில் இருந்து கொண்டு யாழ் அரச அதிபர் அதிசயிக்கத் தக்க வகையில் சிவில் நிர்வாகத்தை நடத்துகிறார்.

போரினால் புலிகளைத் தோற்கடிக்க முடியாது.

அவர்கள் சாவதற்குத் தயாராகவே யுத்தத்திற்குச் செல்கிறார்கள் ஆனால் எங்களின் அப்பாவி இளைஞர்கள் தொழிலுக்காகவே செல்கின்றனர். அதுவே உண்மை நிலை.

அனைவரும் சமாதானத்தையே விரும்புகின்றனர். ஆகவே சமாதானத்தை ஏற்படுத்துவது பற்றியே நாம் பேசவேண்டும்.

ஆனால் யுத்தத்தை விரும்பினால் யுத்தம் தொடரும்.

சிங்கள இனத்தைக் காப்பாற்றுவதற்கே போராடுகிறோம் என உணர்சியுடன் கூறப்படுகிறது ஆனால் அங்கு சென்று பார்த்தால் தான் உண்மை தெரியவரும்.

சிப்பாய்கள் படும் கஷ்டத்தையும் நேரில் சென்று பார்த்தால் தான் தெரியும் — என்றார் [உ 6]

# பண்ணையும் ஆலையும் ஒரே வளாகத்தில் இணைந்து பொருள்வளம் வழியும் காமதேனு

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் மருதனார் மடம் சந்திக்கு வடக்கே 300 யார் தூரத்தில் வலது புறத்தில் இருக்கிறது வெள்ளை வீதி. ஆட்கள் சந்தடிகுறைந்த அமைதியான கிராமப்புற வீதி.

அவ் வீதியில் தான் ''காமதேனு விவசாயக் கால்நடைப் பண்ணை'' அமைந்திருக்கிறது.

காமதேனு என்ற அர்த்தமுள்ள பெயரைப்பற்றி யோசித்த வண்ணம் நான் பண்ணை அலுவலகத்துக்குள் செல்கிறேன்.

இப் பண்ணையும் ஒரு காமதேனு தானா?

காமதேனு என்றால் கேட்டதெல்லாம் வழங்கும் தேவலோக பசு என்று பொருள்படும்.

எமது பண்ணை எத்தகையது? கால்நடைப் பண்ணை என்றதும் டென்மார்க், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள பிரமாண்டமான பண்ணைகளும், அங்கு மேச்சல் தலமெல்லாம் பரந்து நிற்கும் 'குளுகுளு' மாடுகளும், குதிரைகளில் உல்லாசமாக வரும் சொந்தக் காரரும்

### அபிவிருத்தி

பின்னால் ஓடிச் செல்லும் நாய்களும் நினைவுக்கு வந்தன.

இப் பண்ணைகளின் பாலை கொண்டு தயாரிக்கப்பட்ட பால்மாப் பெட்டிகள், பால்மாப் பக்கெற்றுகள், சீஸ் முதலிய பொருள்களும் சிந்தையில் தோன்றின.

எங்கள் காமதேனு பண்ணை இவற்றைப் போன்றதா?

இந்தக் கேள்வி மனதில் முனைப்பாக எழுந்து நிற்க பண்ணைப் பொறுப்பாளரான இளைஞருடன் பண்ணையைச் சுற்றிப் பார்த்தேன்.

பண்ணையின் பகுதிகள் ஒன்றிலிருந்து ஒன்று வெகு தூரத்திலும் மிகப் பெரிய பரப்பளவிலும் இருந்தன.

முதலில் அலுவலகத்தை அண்டியிருந்த கறவைப்பசுக்களையும் ஆட்டுக் கடாக்களையும் பார்த்தோம்.

*கறவைப் பசுக்கள்*

மாட்டுத் தொழுவத்தில் 9ஜேர்சி மாடுகள் நேர் வரிசையாக நின்றன.

தொழுவத்தின் தரை சிமெந்தினால் அமைக்கப்பட்டுள்ளது. அதன் கூரை கல்நார்த் தகட்டினால் ஆனது.

மாடுகளுக்கு சீதை, கோமதி போன்ற நல்ல பெயர்களை வைத்திருக்கிறார்கள்.

இம்மாடுகளில் இருந்து பண்ணைக்குத் தினசரி 45 லீற்றர் பால் கிடைக்கிறது. பண்ணைக்கு அண்மையில் உள்ள மக்கள் லீற்றர் 14 ரூபா வீதம் இந்தப் பாலை வாங்கிச் செல்கிறார்கள். மிகுதிப் பாலைப் பண்ணை பாற்சபைக்குக் கொடுக்கிறது.

பசுக்களைப் பார்த்து விட்டு சினைப்படுத்தும் ஆடுகளைப் பார்த்தோம். மண்ணிற ஜமுனாப் பாறிக் கடா ஒன்றும் கறுப்பு நிறக் கடாக்கள் இரண்டும் நிற்கின்றன.

சினைப்படுத்துவதற்கு ஜமுனாப் பாறிக்கு 150 ரூபாவும்,

## தற்சார்புப் பொருளாதாரம் சாத்தியம் என்பதை எடுத்துக் காட்டும் முன்னோடி

மற்ற ஆட்டுக்கு 100 ரூபாவும் அறவிடுகிறார்கள். 12 பரப்பு நிலத்தில் ஆடு, மாட்டுத் தொழுவங்கள் உள்ளன.

ஆடு மாடுகளுக்கான தீனி, புல் ஆகியன பண்ணையின் கால்நடைத் தீவன ஆலை, தோட்டம் ஆகியவற்றிலிருந்தே பெறப்படுகின்றன.

*கால்நடைத் தீவன ஆலை*

சுமார் 40 பரப்புக் காணியில் அமைந்திருந்த கால்நடைத் தீவன (மாஸ்) ஆலையில் நாங்கள் சென்ற நேரம் பரபரப்பாக மூலப் பொருள்களைக் கலந்து மாஸ் தயாரிக்கும் வேலை நடந்து கொண்டிருந்தது.

காமதேனு பண்ணையின் கால்நடைத் தீவன ஆலை 1993ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது.

கறவைத் தீவனம், குஞ்சுத் தீவனம், வளர்பருவத் தீன், முட்டைத் தீவனம் ஆகிய நாலு வகைத் தீவனங்களை ஆலை உற்பத்தி செய்கிறது.

உள்ளூரில் பெறப்படும் உள்ளீடுகளைக் கொண்டே கால்நடைத் தீவனங்கள் தயாரிக்கப்படுகின்றன.

கழிவு அரிசி, கழிவு கோதுமை மா, குரக்கன், சோளம், எள்ளுப் பிண்ணாக்கு, தவிடு, எலும்பு, சிப்பித்தூள், கருவாடு முதலியனவே மூலப் பொருள்களாகும்.

ஆரம்பத்தில் சொந்தத் தேவைகளுக்கு மட்டும் ஆலையின் கால்நடைத் தீவனம் பாவிக்கப்பட்டது. தற்பொழுது கடைகளுக்குக் கொடுக்கக்கூடியதாக உற்பத்தி பெருகியுள்ளது.

50 கிலோ பக்கெற் கறவைத் தீவனம் 8 50 ரூபா, குஞ்சுத்தீவனம் 1,[illegible] ரூபா, முட்டைத்திவனம் [illegible]

வளர்பருவக் கோழித் தீவனம் 1150ரூபா ஆகவும் 25 கிலோ பக்கெற்றீவனங்கள் முறையே இவற்றின் அரைவாசி விலையிலும் விற்கப்படுகின்றன.

ஆலை இலாபத்தில் நடைபெறுவது மட்டும் அல்ல, பண்ணையின் பிற பகுதிகளின் செயற்பாடுகளுக்கும் ஆலையின் வருமானத்திலிருந்தே நிதி வசதி கிடைக்கிறது.

குறித்த ஒரு மாதத்தில் ஆலை மூன்றரை இலட்சம் ரூபாவை இலாபமாகப் பெற்றது.

ஆலையை விஸ்தரிக்கவும், ஆலையின் செயற்பாடுகளை மேலும் இயந்திரமயப்படுத்தவும் முயற்சிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காணமுடிந்தது.

ஆலை வளவுக்குள்ளேயே கால்நடைத் தீவன உற்பத்தியில் முக்கியமான மூலப் பொருளான சோளத்தை சாகுபடி செய்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

ஆலையில் ஓர் இளைஞர் முகாமையாளராகப் பணிபுரிகின்றார் அவருடன் 5 ஆண்களும் 2 பெண்களும் இப்பிரிவில் வேலை செய்கின்றனர்.

*செழிப்பான தோட்டம்*

ஆலையிலிருந்து சற்றுத் தொலைவில் காமதேனு பண்ணையின் 60 பரப்புத் தோட்டம் உள்ளது.

பண்ணை இந்நிலத்தைச் சாகுபடிக்கென எடுத்தபோது அது முட்பற்றைகளும் குண்டு குழிகளும் நிறைந்த காட்டு நிலமாக இருந்தது

இப்பொழுது பல்வகைப் பயிர்களும் சாகுபடி செய்யப்படும் பசுமையான தோட்டமாக அது விளங்குகிறது.

தோட்டத்தில் எல்லாமே உண்டு என்னும் அளவிற்கு அங்கு கரட் முதல் ராசவள்ளிக்கிழங்கு, நாற்றுக்கள், வாழை, ஒட்டு மர வேலைக்கான நாற்றுகள் இன்ன பிறவும் இருக்கின்றன.

தோட்டத்தின் காடு வளர்ப்புப் பகுதியிலிருந்து 23,000 கன்றுகள் மர நடுகைக்காகக் கொடுக்கப்பட்டன என்று கூறினார்கள்.

சவுக்கும், மலைவேம்பும் ஒரு கன்று 10 ரூபாவாகவும், மற்றக் கன்றுகள் ஒன்று 5 ரூபாவாகவும் விற்றார்கள்.

தோட்டத்திலிருந்து தான் பண்ணையின் கால்நடைகளுக்குப் புல்லுக் கிடைக்கின்றது. [illegible] தோட்டத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது.

*கோழிப்பண்ணை*

கோழிப்பண்ணை தோட்டத்தில் இருந்து சுமார் அரை கிலோ மீற்றர் தூரத்தில் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்துக்குப் பின்னால் உள்ளது.

கோழிக்குஞ்சுகள், கோழிகள் ஆகியவற்றுடன் வான்கோழி, கினிக் கோழி, வெள்ளடியன் ஆகியனவும் சீமை முயல், தாரா ஆகியனவும் அங்கு வளர்க்கப்படுகின்றன.

கோழிக்குஞ்சுகளைத் தக்க வெப்ப நிலையில் வைத்திருக்க ஒவ்வொரு கூட்டிலும் இரண்டு ஹரிக்கேன் லாம்புகளைப் பாவிக்கின்றார்கள். அத்துடன் இன்னும் வெப்பம் தேவையென்றால் கூட்டுக்கு மேலேயிருக்கும் சாக்குகளால் மூடிவிடுகிறார்கள்.

பண்ணை ஆரம்பமாகியது முதல் இதுவரை 23 ஆயிரம் அடைமுட்டைகளைத் தாம் விநியோகித்திருப்பதாகவும் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் முட்டை விலை குறைந்ததற்கு இதுவும் ஒரு காரணமாயிருக்கலாம் என்றும் பண்ணை முகாமையாளர் சற்றுப் பெருமையுடன் கூறினார்.

40 பரப்புக் காணியில் அமைந்துள்ள கோழிப் பண்ணையில் 2 ஆண்களும் 2 பெண்களுமாக நாலவர் வேலை செய்கின்றார்கள்.

கோழிப் பண்ணை நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

*விற்பனை நிலையம்*

காமதேனு விவசாயப் பண்ணையைப் பார்வையிடச் சென்றதில் கடைசியாக விற்பனை நிலையத்தைப் பார்த்தேன்.

வெள்ளை வீதி முகப்பில் உள்ள விற்பனை நிலையத்தில் பண்ணையின் உற்பத்திப் பொருள்களும் கால்நடை வளர்ப்புச் சம்பந்தமான பிற பொருள்களும் விற்கப்படுகின்றன.

சேவையும் இலாபமும் கலந்த விற்பனை நிலையம் அது.

முடிவாக முகாமையாளரிடம் பண்ணையின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் கேட்டேன்.

மாடுகளை அதிகரித்துப் பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்; கூடுதலான பால்ப் பொருள்களைத் தயாரித்துப் பாவனைக்கு விட வேண்டும்; கால்நடைத் தீவன உற்பத்தியைப் பெருக்கி யாழ். குடாநாட்டின் கால்நடைத் தீவனத் தேவையைக் கணிசமான அளவு வழங்க வேண்டும்; யாழ்ப்பாண மக்களின் முட்டைத் தேவையை நியாயமான விலையில் பூர்த்தி செய்ய வேண்டும்; பரவலான கோழி வளர்ப்புக்கு உதவ வேண்டும்''' இப்படியே அடுக்கிக் கொண்டே போனார்.

செயற்படு திட்டத்தின் அடிப்படையில் தான் அவர் இதைக் கூறினார் என்பது தெளிவு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் செயற்பாடுகள் அத்தகையவை: வெறும் கடதாசியிலான திட்டங்கள் அல்ல.

கழகத்தின் வெற்றிகரமான திட்டங்களில் காமதேனு விவசாயப் பண்ணையும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை.

துறைசார் நிபுணர்களின் உதவி, அர்ப்பணிப்பான ஊழியர்கள். பாடுபட்டுழைக்கும் தொழிலாளர்கள், வழிகாட்டும் கழகம் - இவற்றின் கூட்டு மொத்தமான முயற்சியின் விளைவாகவே காமதேனு விவசாயப் பண்ணை வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

ஒருவகையில், காமதேனு என்ற பெயர் பொருத்தமானதே. ஊற்று நல்ல ஊற்றாகவே உள்ளது.

மேற்கத்தைய பண்ணைகளிலும் பார்க்க வித்தியாசமான, இன்னும் ஒரு வித்தில் சிறப்பான முறையில் வளர இது போன்ற பண்ணைகளுக்கு வாய்ப்புண்டு. பிரதேசத்துக்குப் பிரதேசம் தற்சார்புப் பொருளாதாரத்தைக் கட்டியமைக்க இத்தகைய பண்ணைகள் உதவும். எந்தப் பொருளாதார முற்றுகையையும் சமாளிக்க இப்பண்ணைகள் மக்களுக்குத் துணைபுரிகின்றன.

— பாரதிநேசன்

★

உரம் இல்லை என்று சொல்லாதே-இயற்கை
உரம் உன்காலடியில் மறவாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதங்கேணி ஆஸ்பத்திரியில்

# நுண்கருவியாளர் இன்றி நோயாளர்கள் பெரும்பாதிப்பு

மருதங்கேணிப் பகுதியில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இங்குள்ள அரசினர் வைத்தியசாலையில் உரிய சிகிச்சை பெற முடியாமல் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மலேரியா நோயை இரத்தப் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கும் நுண்கருவியாளர் இவ்வைத்தியசாலையில் இல்லாததாலேயே இந்நிலை தோன்றியுள்ளது.

மலேரியா நோய் இப்பகுதியில் வேகமாகப் பரவி வருவதாகவும் — கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் மட்டும் சுமார் ஆயிரத்து 600 பேர் சிகிச்சைக்காக இவ்வைத்தியசாலையை நாடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் நுண்கருவியாளர் இல்லாததால் இவ்வைத்தியசாலையில் இருந்து பரிசோதனைக்காக வேறு இடங்களுக்கு இரத்தம் அனுப்பப்படுவதாகவும் — அது சம்பந்தமான அறிக்கை வந்து சேர ஒரு மாதகாலம் செல்வதால் நோயாளர்கள் உரிய நேரத்தில் சிகிச்சை பெறமுடியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-144)

## தொழில் நியாயமன்ற ஊழியர் இடமாற்றம்

### ஆட்சேபித்து அமைச்சுக்குக் கடிதம்

வட பிராந்திய தொழில் நியாயமன்றத்தில் பணியாற்றும் ஊழியர்கள் கொழும்பிலுள்ள தொழில் நியாயமன்றத் தலைமைக் காரியாலயத்துக்கு இடம்மாற்றப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்தை ஆட்சேபித்து மேற்படி ஊழியர்கள் நீதி அமைச்சரின் செயலாளருக்கு கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

அத்துடன் இம்மாற்றங்கள் அமுலாகும் பட்சத்தில் வட பிராந்தியத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், ஆகிய 5 மாவட்டங்களில் தொழில் நியாயமன்ற செயற்பாடுகள் இல்லாது போகும் என இந்த ஊழியர்கள் தெரிவித்தனர்.

இடமாற்றக் கடிதங்கள் கடந்த முதலாம் திகதி இவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

## ஆஸ்பத்திரியில் வெடிப்பொருள்

கொழும்பு, பெப். 14

எம்பிலிப்பிட்டியாவில் கொடகாவெல மருத்துவமனைக்குள் வெடிப்பொருள்கள் மற்றும் குண்டுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருள்கள் அடங்கிய பார்சல் ஒன்றை பொலீஸார் கடந்த திங்கட்கிழமை கண்டுபிடித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர் கொடுத்த துப்பைத் தொடர்ந்து பத்துக் கிலோ எடையான அப்பார்சலை பொலிஸார் கைப்பற்றினர் என்றும் சொல்லப்பட்டது.

இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. (ஒ-எ)

## முத்திரையிடல்

யாழ்ப்பாணம், பெப். 14

இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க் கிழமையும் பளை பிரதேச செயலகத்தில் வைத்து காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும். (த- ;2 )

## பொற்கோயிலில் செருப்பு துடைக்கும் பூட்டாசிங்!

### முன்னாள் அமைச்சருக்கு தண்டனை!

அமிர்தசரஸ், பெப். 14

பஞ்சாப்பில் உள்ள சீக்கியர்களின் புனித கோயிலான பொற்கோயிலில் முன்னாள் அமைச்சர் பூட்டாசிங், அங்கு வரும் பக்தர்களின் செருப்புகளைத் துடைத்து சுத்தம் செய்கிறார்.

அத்துடன் பொற்கோயிலை பெருக்கித் துப்புரவு செய்வதுடன் அங்குள்ள சமையல் பாத்திரங்களையும் கழுவுகிறார்.

அவரது கழுத்தில் "நான் பாவம் செய்தவன்" என்று எழுதப்பட்ட பலகை தொங்கிக் கொண்டிருக்கிறது.

பூட்டாசிங் அமைச்சராக இருந்த காலத்தில் இந்திய ராணுவத்தினர் சீக்கிய தீவிரவாதிகளைப் பிடிப்பதற்காக பொற்கோயிலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி இருந்தனர்.

இதற்காக இந்திராகாந்திக்கு மரணதண்டனை அறிவித்த சீக்கிய தலைமைப்பீடம், பூட்டாசிங்கை பாவம் செய்தவராக அறிவித்து அவரை சீக்கிய மதத்தில் இருந்து ஒதுக்கி வைத்தது.

இதன் பின்னர் தம்மை மன்னிக்கும்படியும் சீக்கிய மதத்தில் தம்மை மீண்டும் சேர்த்துக் கொள்ளும்படியும் பூட்டாசிங் சீக்கியமத தலைமைப் பீடத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கை தொடர்பாக விசாரணை நடத்திய சீக்கிய மத தலைமைப்பீடம், பூட்டாசிங் 56 தினங்கள் அங்குவரும் பக்தர்களின் செருப்புக்களைத் துடைத்து சுத்தம் செய்ய வேண்டும் என்றும்—

பொற்கோயிலின் தரையைச் சுத்தம் செய்யவேண்டும் என்றும்—

அங்குள்ள பாத்திரங்களைக் கழுவ வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியது.

கடந்த ஜனவரி 26 ஆம் திகதி தொடக்கம் பூட்டாசிங் தனது த ்டனையை அனுபவித்து வருகிறார்.

இவர் தண்டனையை ஏற்றது, தீவிரவாதத்துக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் செயல் என்று காங்கிரஸ் அரசியல்வாதிகள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர். (இ)

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## எம்.எஸ்.எவ் சேவை தொடர ஆஸ்திரேலிய நிறுவனம் உதவி

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரெஞ்சு வைத்திய நிறுவனமான எம். எஸ். எப். அமைப்பு தனது நடமாடும் வைத்திய சேவையைத் தொடர்ந்து நடத்துவதற்காக ஆஸ்திரேலிய சர்வதேச வளர்ச்சி உதவிப் பணியகம் 53 லட்சம் ரூபாவை வழங்கி உள்ளது.

ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் வெளிநாட்டு உதவி ஏஜென்ஸியின் ஒரு பிரிவாக இப் பணியகம் செயற்படுகின்றது.

இந்த நடமாடும் வைத்திய சேவையின் கீழ் அத்தியாவசிய மருந்து வகைகள் விநியோகம் கடுமையான நோயாளர்களை மட்டக்களப்பு பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வது போன்ற பணிகளில் எம். எஸ். எப் அமைப்பு ஈடுபட்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு சுகாதார அமைச்சின் வைத்திய அதிகாரிகள் சென்று வருவதற்குத் தேவையான பாதுகாப்பையும் இந்த எம். எஸ் எப். அமைப்பு வழங்கி வருவதாகவும் கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதர் ஹொவார்ட் டெபன்ஹாம் தெரிவித்தார். (த-எ)

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில்

## ரூ. 50லட்சம் பெறுமதியான உபகரணங்கள் திருட்டு!

கொழும்பு, பெப். 14

மட்டக்களப்பு வைத்தியசாலையில் 50லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் திருட்டுப் போயுள்ளதாகவும்-

இது தொடர்பாக மேற்படி வைத்தியசாலையின் கணக்காய்வுப் பிரிவு உயர் அதிகாரி ஒருவரை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் சுகாதார அமைச்சுக்குக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அரச சேவைகள் ஐக்கிய தாதிகள் சங்கம் சுகாதார அமைச்சுக்கு அனுப்பிய மகஜர் ஒன்றிலேயே இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேவேளை— இந்த அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க, சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தடை விதித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [த-9]


சுயதொழில் செய்வோர் வெளிநாடு செல்வோருக்கு

**ஓர் அரிய சந்தர்ப்பம்**

இர மநாதன் கல்லூரி
பிரத்தியேக தையற்கலை கைவினை கலை வகுப்புகள்

★ நவீன ஆடை
★ கேக் ஐசிங் தயாரித்தல்
★ பலவகையான பூக்கள் செய்தல்
★ மெஷினாலும், கையாலும் ஸ்மோக்கிங்
★ எம்பிரோய்ட்டரி
★ சுவெற்றர்
★ லேஸ் பின்னுதல்
★ வர்ண ஒட்டு வேலைகள்
★ இன்னும் வேறு பல பிரத்தியேக கலைகள்

● புதிய வகுப்புகள் 16 - 02 - 1994 காலை 9-00 மணிக்கு ஆரம்பம்.
● சனி, ஞாயிறு நாட்களில் பிற்பகல் 3-00மணிக்கு நடைபெறும்.
● பயிற்சி முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

— நிர்வாகி.

[சி-2066]






மில்க்வைற்
நீல சோப்
(அரை)
நீல சோப்

மீண்டும்
சலவைத்தூள்
விற்பனையாகின்றது.




இவற்றின் மேலுறைகள், வெற்றுப் பக்கெற்றுகள் 25 சேர்ப்பித்து அப்பியாசக்கொப்பி/தெளிவுரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்ட ஆத்திசூடி இவற்றுள் ஒன்றை அன்பளிப்பாகப் பெறுங்கள்.

(சி-7323) — மில்க்வைற்



நெஞ்சம் நெகிழ
31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 12 – 12 – 1952



மறைவு: 15 – 01 – 1994

அமரர் செ. குலேந்திரன்
(கல்வி உத்தியோகத்தர், தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்)

எமது சங்கத்தில் கல்வி உத்தியோகத்தராக கடமையாற்றி 15 - 01 - 1994 இல் காலமான அமரர் திரு. செ. குலேந்திரன் அவர்களின் 31 ஆம் நாளை இட்டு எமது நினைவு அஞ்சலியை செலுத்துகின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.

(சி-7333)



வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் நடத்தும்
தையல், தட்டச்சு பயிற்சி நிதிக்கான

## இரண்டு நாள் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்

காலம்: 19 - 02 - 94, 20 - 02 - 94 காலை 8 00 தொடக்கம் 12-00 மணிவரை, மாலை 2.00 தொடக்கம் 5-00 மணிவரை

ஒன்பது பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் கழகங்கள்

| | | |
|---|---|---|
| 1) பாடுமீன் | விளையாட்டுக் கழகம் | குருநகர் |
| 2) விநாயகர் | விளையாட்டுக் கழகம் | அளவெட்டி |
| 3) சென். அன்ரனிஸ் | விளையாட்டுக் கழகம் | பாஷையூர் |
| 4) ஞானமுருகன் | விளையாட்டுக் கழகம் | மயிலங்காடு |
| 5) சென். மேரிஸ் | விளையாட்டுக் கழகம் | நாவாந்துறை |
| 6) ஸ்கந்தா ஐக்கிய | விளையாட்டுக் கழகம் | சுன்னாகம் |
| 7) றோயல் | விளையாட்டுக் கழகம் | ஊரெழு |
| 8) யங்கென்றிஸ் | விளையாட்டுக் கழகம் | இளவாலை |
| 9) அம்பாள் | விளையாட்டுக் கழகம் | புங்குடுதீவு |
| 10) அரியாலை ஐக்கிய | விளையாட்டுக் கழகம் | அரியாலை |
| 11) திருமலை நட்சத்திரங்கள் | விளையாட்டுக் கழகம் | யாழ்ப்பாணம் |
| 12) பொற்பதி | விளையாட்டுக் கழகம் | கொக்குவில் |

இப்போட்டிகளுக்கான பிரவேசக் கட்டணம்
100/- 50/- 25/- (10/- பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்)

அனைத்து உதைபந்தாட்ட ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி.

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கமும்
தையல், தட்டச்சு பயிற்சி மாணவர் ஒன்றியமும்

(சி-7815)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள வீட்டிற்குரிய கண்ணாடி சோக்கேஸ், குசன் செற்றி, டைனிங் ரேபின், மர அலுமாரி, மீன் தொட்டி, மீன் தொட்டிக்குரிய மோட்டர், விற்பனைக்குண்டு. சி. நாதன், 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி. (29397)

இணுவில் கே. கே. எஸ். வீதியில் இரண்டரைப் பரப்பு காணியுடன் 5400 சதுர அடி மாடிக் கட்டடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: செ. பொன்னம்பலம், கே. கே. எஸ். வீதி, இணுவில். (29415)

நல்ல இனத்தைச் சார்ந்த 9 மாத தலைஅடி கறுப்பு ஆட்டுக் கடா உண்டு தொடர்பு; க. சிவம், தில்லகட்டி ஒழுங்கை, சுன்னாகம். காலை 9 மணிக்கு முன்பும் மாலை 4 மணிக்கு பின்பும் பார்வையிடலாம். (6800)

### விற்பனையாகின்றது

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 30 பயிற்சிகள் (கணிதம், தமிழ்) மீட்டல் க்ஷேத்திரகணிதம், ஆள்கூற்று க்ஷேத்திர கணிதம் OMO'S English 1,2,3,4 கிடைக்குமிடம்: ஸ்ரீலங்காப் புத்தகசாலை, 234. கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (சி-7332)

### CD - 70 விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சிவப்பு நிற CD - 70 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. அறிவகம், புத்தகசாலை அருகில் 374, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்திக்கருகில், யாழ்ப்பாணம். (சி-7236)

### மீன்தொட்டி

3 அடி நீளம், 1½ அடி அகலம், உயரம் கொண்ட தடித்த ஐந்து பக்க கண்ணாடித் தொட்டி மேல்க் கூரையுடன் உண்டு. 240V Japan Air Pump, நீர் வெளியேற்றி சுத்திகரிக்கும் அழகிய பல உபகரணங்களுடன் விற்பனைக்கு உண்டு. வைத்தீஸ்வரன் முகுந்தன், மானிப்பாய் ஆண்கள் பாடசாலைக்கு முன். (6965)

### பணிப்பெண் தேவை

சிங்கப்பூரில் சமையல் மற்றும் எல்லா வீட்டு வேலைகளும் செய்ய அனுபவமுள்ள பெண் தேவை. பாடசாலைப் படிப்பு பற்றிய ஆதாரங்களும், அடையாள அட்டையும் கொண்டு உடன் நேரில் வரவும். S. K குலசேகரம், ஒய்வு பெற்ற அரசாங்க ஊழியர், டச் றோட், மீசாலை. (விக்கினேஸ்வரா பாடசாலை முன்பாக) (29400)

### SPECIAL ENGLISH

Spoken English, N. C. E. G. A. Q, G. C. E. (O/L) மற்றும் ஆண்டு 4 — 11 வரையிலான வகுப்புகளுக்குரிய விசேட ஆங்கில வகுப்புகளில் புதிய பிரிவுகள் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். தொடர்பு: R சிவலிங்கம் (Dip in-Eng.) புதிய ஆங்கில கல்வி நிலையம், 82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம். (6969)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றறிகளும் உதிரிப் பாகங்களும் எம்மிடம் உண்டு. சுஜன்ஸ் வாச் வேக்ஸ், இல: 12, ஸ்ரேசன் வீதி, (சந்திக்கு அருகில்), சுன்னாகம். (6967)

### திருத்தவேலைகள்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன், திருத்திக் கொடுக்கப்படும். நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும், டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி. (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம் இளை கண்டி வீதி, சாவகச்சேரி. (சி/7215)

### ரமணிசசந்திரன்

41 விதமான ரமணிச்சந்திரனின் நாவல்களும், கண்ணதாஸன், சிவசங்கரி, சுஜாதா மற்றும் பிரபல எழுத்தாளர்களின் நாவல்களும் விற்பனையாகிறது. பிரதிகளுக்கு முந்துங்கள். ராஜன் புத்தகசாலை, 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (6958)

### பலாபலன்

94இல் குரு, சனி, ராகு, கேது மாற்றங்களை வைத்து எழுதப்பட்ட பலாபலன்கள் எல்லா ராசிகளுக்கும் சண் மாஸ்ரர் எழுதிய நூலைக் கேட்டு வாங்கவும். சோபிதா, யாழ்நகர். (29382)

### இப்போது கிடைக்கும்

பாலர் பாடசாலைக்குரிய அஷ்டலக்ஷ்மி, பாலர் தமிழ், ABC Book விற்பனைக்கு வந்துவிட்டது. சிவா பிறின்டேர்ஸ், கைதடி, சோபிதா, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (6957)

### சனி மாற்றம்

11-2-94 சனி மாற்றம் ரூபா 10/- புதிய வெளியீடு விற்பனையாகின்றது. பாடசாலைப் புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள், இந்தியச் சஞ்சிகைகள் கிடைக்குமிடம்: ஆனந்தீஸ் புத்தக நிலையம். இல. 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (26405)

## திறந்த பல்கலை. துணை வேந்தர் இங்கு வருகிறார்

யாழ்ப்பாணம், பெப். 14

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தை இயக்குவது தொடர்பாக ஆராய திறந்த பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் தயாந்தா விஜயசேகரா அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவருடன் மேலும் இரு அதிகாரிகளும் வரவிருக்கின்றனர்.

யாழ். மாவட்ட மாணவர்களுக்கு திறந்த பல்கலைக்கழகத்தின் பயிற்சி நடத்துவதில் உள்ள சிக்கல்கள் குறித்து இவர்கள் இங்கு ஆராய்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிப்பு; பிரிட்டன் ரூ.20லட்.நிதியுதவி

கொழும்பு, பெப். 14

வடக்கு - கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர நிவாரண உதவிகளை வழங்கவென கெயர் நிறுவனம் மூலம் பிரிட்டிஷ் அரசு 20 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள 5 ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு கெயர் நிறுவனம் உணவுப்பொருள்கள், தற்காலிக இருப்பிட வசதிகள் உடுபுடைவைகள், படுக்கை விரிப்புகள், சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு இந்த நிதியில் இருந்து பெருமளவு பணம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி


கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான ஆலய பிரதம குருக்களும், அமரர் நயினர் ஐ. கயிலாசநாதக் குருக்களின் மருமகனுமாகிய சிவஸ்ரீ ப. கணேசராஜாக்குருக்களின் மறைவையொட்டி அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மு. சி. சண்முகராசா,
தர்மகர்த்தா,
ஆலய பரிபால தர்மகர்த்தா சபை.

கண்ணகை அம்மன் என வழங்கும்,
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்,
புங்குடுதீவு. (29428)

## நீங்காத நினைவின் முதலாம் ஆண்டு அஞ்சலி

தோற்றம்: 26 — 02 — 1912



மறைவு: 25 — 02 — 1993

### அமரர் அ. சி. கந்தையா

திதி: 1994 - 02 - 14

இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய மலேசியா பத்துமலை முருகப்பெருமானையும், காரைநகர் அழகாபுரி சோலை வயிரவமுருகப் பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வந்து பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மூளாய் கிழக்கு,
மூளாய்.

(6968)

## திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

உ

### மாசிமக இலட்சார்ச்சனை விழாவும் விஷேட திரவ்விய ஹோமமும்

16-02-1994 புதன் முதல் — 25-02-1994 வெள்ளி வரை தினமும் காலை 10 மணிக்கு இலட்சார்ச்சனையும், திரவ்விய ஹோமமும் நடைபெறும்.

மாசி மாதம் 13 ஆம் நாள், (25-02-1994) வெள்ளி மாசி மகத்தன்று காலை அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், அம்பாளுக்கு அறுபத்திநான்கு உபசார பூஜையும், மாலை ஸ்ரீசக்கரபூஜையும், 108 தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு நவசக்தி அர்ச்சனையும், இலட்சார்ச்சனை பூர்த்தி உற்சவமும் நடைபெறும்.

— தேவஸ்தானம்

(29419)

## தேவை

அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் கீழ்க்கண்ட வேலைகளுக்கு நேரில் சமுகம் தரவும்.

1. விற்பனையாளர்கள்
2. கணக்குப்பதிவாளர்
3. விற்பனை உதவியாளர்
4. உதவியாளர்

அனுபவம், திறமை அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும். இருபாலாரும் தொடர்புகொள்ளவும்.

வேலை நாட்களில் 12-30 — 2-30 மணிவரைக்கும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
பதிய இலக்கம் 234.
கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

(சி-7233)

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

மலர்வு: 12 — 02 — 1929



உதிர்வு: 15 — 01 — 1994

### இரத்தினகோபால் தனலக்சுமி

எங்கள் குடும்ப வானில் எம்மை
உருவாக்கி, தீபமாய் எரிந்த
ஆருயிர்த் தெய்வமே!
பாசம் மிகுந்த தெய்வத் தாயே
இன்பங்கள் ஒன்றாய்க் கூடிவந்த
வேளைகளில் எங்களுடன்
இன்புற்றிருந்தீர்கள்
பின் விடையேதும் பெறாமல்
நாம் கண்கலங்கி நிற்க கடவுள்
ஏன் அழைத்தானோ
அம்மா உங்கள் நினைவு என்றும்
எங்களை விட்டுப் போகாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்

''லக்சுமி'' வாசம்,
527, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (29427)

## திருமணத் திருமுகம்

உ

மானிப்பாய் சோதி வேம்படி
திரு. நாகேந்திரம்
தம்பதிகளின் புதல்வன்
திருவளர் செல்வன்
**பாலச்சந்திரன்**
அவர்களுக்கும்

காங்கேசன்துறை 'திருப்தி',
கல்லூரி வீதி
திரு. வே. இராமலிங்கம்
தம்பதிகளின் புதல்வி
திருநிறை செல்வி
**கலாவாணி**
அவர்களுக்கும்

ஸ்ரீமுக வருடம் தை 23ஆம் நாள் (05 - 02 - 94) சனிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரையிலான சுபமுகூர்த்த நேரத்தில் கனடாவில் உள்ள றிச்மன்ட்ஹில் ஸ்ரீ கணேசர் ஆலய கல்யாண மண்டபத்தில் இறையருளுடனும் பெரியோர்களின் ஆசியுடனும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

திருமதி V இராமலிங்கம் (குறமகள்),
81, பேர்லிங்டன் தெரு,
ரொறன்ரோ,
ஒன்ராறியோ M8V 2W1.

(6966)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லைவெளி 'சுதர்ஸனம்' மரம் வளர்ப்புத்திட்ட நிர்மாணி திரு. மா. கனகராசா அவர்களுக்கு "இயற்கை நேசன்" எனும் சிறப்புப்பட்டம் வழங்கப்படுவதையொட்டிய சிறப்பிதழ்

## சுயநலமிலா பெருநோக்குடையோன்

அருளோங்கும் மெய்யன்பர்களே!

தருமசீலர் திரு. மா. கனகராசா அவர்கள் மரம் நடுகைக்கு நான்கு ஏக்கர் நிலம் உபகரித்தமைக்கு, சுன்னாகம் முத்தமிழ் மன்ற நூலக அன்பர்கள் அவருக்கு "இயற்கை நேசன்" என்ற புகழாரம் சூட்டி அவரைக் கௌரவித்தல் சாலப் பொருத்தமதாகும். இது நன்றி மறவா நிகழ்வு. தரும சிந்தனையும், சுயநலமிலாப் பெருநோக்குடையோர் ஆயிரத்தில் ஒருவரையே காணலாம். இம் மரநடுகையால் மக்கள் அடையும் நற்பயனெல்லாம், புண்ணியமேயாகும். திரு. மா. கனகராசா அவர்களைப் பாராட்டி அவர்கள் நலமே நீடுவாழ வேண்டுமென இறையருளைத் தியானித்து அவரை ஆசீர்வதிக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

ஆதீன முதல்வர்,
நல்லை ஆதீனம்.

## "இயற்கை நேசனே, நீவிர் பல்லாண்டு வாழ வேண்டும்"

இயற்கையை நேசித்து மனிதன் வாழப்பழக வேண்டும். அப்போதுதான் மனித வாழ்வு மேம்படும். எனவே தனது சொந்த நிதியூட்டத்தில் நாலு ஏக்கர் பரப்பில் மரம் வளர்த்துவரும் திரு. மா. கனகராசா அவர்களிற்கு இயற்கை நேசன் என்ற பட்டம் சாலவும் பொருத்தமானதாகும். அவர்பணி தொடர்ந்து, நிறைவாக, வாழ வாழ்த்துகின்றேன்.

சுபம்
தேசாபிமானி ஆ. சி. முருகுப்பிள்ளை
நிறுவனர்
விநாயகர் தரும நிதியம், வியாபாரிமூலை

## சீர்பாடி வாழ்த்துகின்றோம்

மரம் வளர்ப்புத் திட்ட நிர்மாணிகள்
கரம் கூப்பித் தொழும் தகைமையர்கள்
சிரம் தாழ்த்திச் சீர் பரவி வாழ்த்துகிறோம்
வரம் பெற்ற தவசிகள் போல் மகிழ்கின்றோம்.

க. கனகராசா,
"மில்க்வைற் நிறுவனம்"

## இயற்கை அன்னைக்கு திருமலர் சூடிய நேசர்

தமிழீழ மண்ணின்மேல் போராட்ட மேகங்கள் கருக்கூட்டி இருக்கும் இவ்வேளையில் பசுமைப் புரட்சிக்காக மக்கள் களத்தினில் இறங்க வேண்டும். உணவில்லையேல் போராட்டம் இல்லை என்ற நிலை ஏற்படாமல் தடுக்க எமது முன்னோர் வைத்துவிட்டுச் சென்ற மரங்களைத் தறித்து எரிக்கின்ற நாம், எமது ஜீவனோபாய தேவைக்கு பயன்படுத்துகின்ற நாம், அதற்கு பிரதியீடாக மரம் நடுகை மேற்கொள்வது அவசியம். இது ஓர் மனித நேய செயலும் ஆகும்.

இந்த வகையில் திருமிகு மார்க்கண்டு கனகராசா அவர்கள் முற்போக்குச் சிந்தனையும், தாராள மனப்பான்மையும், தியாக சிந்தனையும் கொண்டவர்.

உவர் நிலம், பயன்பாட்டுக்கு உதவாத நிலம் என இருந்த வல்லைவெளி வெற்றுநிலத்தில் மரநடுகையினை மேற்கொண்டு இயற்கை அன்னைக்கு மாலை சூடியதும் சமூகத்தின் சூழல் பாதுகாப்புக்கு வழிசெய்து கொடுத்த அதி உத்தமரும் ஆவார்.

"இயற்கை நேசன்" என்ற பட்டம் நிச்சயம் உகந்ததே. இவர் எமது சங்கத்தின் புழுக்கொடியல் மாபிஸ்கட், பனாட்டுக் கப்பனிஸ் போன்ற உபஉணவு உற்பத்திக்கு மிகையாக உதவியவர்.

இயற்கை அன்னைக்கு திருமலர் சூடும் இயற்கை நேசன் ஐயா அவர்கள், பல்லாண்டு பல்லாண்டு பல்செல்வங்களும் பெற்று வாழ்வாங்கு வாழ உத்தமனை வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
கர, ப- தெ. வள. அ. கூ., சங்கம்.

நெல்லியடி,
கரவெட்டி.

## மண் வாசனைப்பற்று என்னை ஈர்த்தது

"சுதர்ஸனம்" திரு. மா. கனகராசா அவர்களை நான் நன்கறிவேன். அவர் கரவையூர் மண்ணைச் சார்ந்தவர். அவரது மண் வாசனைப் பற்று என்னை ஈர்த்தது. மண்ணை நேசிக்கும் மகனை "தமிழீழம்" என்றும் போற்றும்.

இந்த ரீதியில் பார்க்கும் போது, அவர் நாட்டிய மரங்களெல்லாம் இன்று அவரைப் புகழ்ந்து கொள்கின்றன. வல்லைவெளி ஒரு பெரிய வெளியாக; காற்றுக் கடுமையாக வீசும்பொழுது; துவிச்சக்கர வண்டியிலோ; அன்றோ வேறு வாகனங்களோடு செல்வதோ பெரிய பிரச்சினையாக இருக்கின்றது.

"இந்தக் காற்று வேகத்தைக் குறைக்கவும், கடலால் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்கவும், விவசாயத்தைப் பாதுகாக்கவும், நீரைத் தூய்மையாக்கவும், அழகையும் வனப்பையும் அளிக்கவும், சூழல் மாசுபடுவதைத் தடுக்கவும்."

அவரால் நாட்டப்பெற்ற மரங்கள் எம்மக்களுக்கு ஒரு பெரிய ஆறுதலும் கொடையுமாகவும்; "நீங்கள் வாழ மரங்கள் நாட்டுங்கள்" என்ற குறிக்கோளை வைத்து மற்றவர்க்காக தன்னலமற்ற சேவை புரியும் இம்மகானை நாம் வாழ்த்துகின்றோம்.

இன்றைய யுத்தப் பேரழிவினால் எமது பூமி "செயற்கையாக" மாறுகின்றன. இவ்வேளையில் "இயற்கையைச்" பேணிவளர்க்கும திரு. மா. கனகராசா அவர்களை நாம் "இயற்கை நேசன்" என வாழ்த்திப் போற்றுவது அவருக்குத் தகுந்ததும், எமக்குப் பெருமையும் நிறைந்ததாகும்.

செஞ்சிலுவைச் சங்கம், கரவெட்டிப் பிரிவின் சார்பில் பாராட்டுக்களையும், மகிழ்ச்சியையும் ஆசிகளையும் கூறி நிற்கின்றேன்.

ஜே. ஜீ. இராஜேந்திரம்,
தலைவர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யா/கரவெட்டிப் பிரிவு.

## ஔவைப் பாட்டி கண்ட குறுநில மன்னர்

மனிதன் இயற்கை அன்னையின் அழகைத் தயவு தாட்சண்யம் இன்றிக் கணத்துக்குக் கணம் அழித்துக் கொண்டிருக்கிறான்.

இந்தவகையில் எமது பிரதேசத்தில் காணப்படும் பற்றைக் காடுகள் அழிக்கப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதனால் எமது பிரதேசத்தில் மழை வீழ்ச்சி குன்றி, நிலம் வரண்டு பாலை நிலமாகும் துரதிர்ஷ்டமும் உண்டாக வாய்ப்புண்டு.

இக் கெடுதலை உணர்ந்து, சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் மர மீள நடுகைத் திட்டம் எமது பிரதேசத்தில் அமுலாக்கப்பட்டு வருகிறது.

இத் திட்டம் சிறப்பாக நடைபெற வடமராட்சியில் முன்னின்று உழைப்பவர்களில் ஒருவர் திரு. மா. கனகராசா ஆவர்.

ஔவைப் பிராட்டியின் வளமான சிந்தனைக்கு எப்படி ஒரு குறுநில மன்னன் காரணமோ, அதே போல எமது பகுதி வளர்ச்சிக்கும் தம்மிடம் உள்ள சிறு வளம் மூலம் இவர் மன்றுகோலாக இருக்கின்றார்.

மேலை நாடுகளில் எம்மவர் இடாம்பீக முறையில் பிறந்த நாள் கொண்டாடுகின்ற வேளையிலே, தாம் பாடுபட்டுத் தேடிய பணத்தை பிறர்க்கு இட்டு உண்டு களித்திடும் இவர் பொருட்டுத்தான் இன்று எல்லோருக்கும் மழை பெய்துகொண்டிருக்கிறது.

பல்லாண்டுகள் இவர் வாழ்ந்து இந் நாட்டுக்கு ஆற்றப்போகின்ற பணி பல்லாயிரம் ஆண்டுகள் பல கோடி மக்களாலும் பாராட்டப்படும் என்பதில் ஓர் ஐயமும் இல்லை.

செல்லமுத்து ஸ்ரீநிவாசன்
பிரதேச செயலர்,
வடமராட்சி தெற்கு - மேற்கு.



யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களிற்கிடையேயான தடகள விளையாட்டு விழா 1993 சாதனை விருது வழங்கல் விழாவில் திட்ட நிர்மாணி உரையாற்றுகிறார்.
[நன்றி: பிரதேச செயலர் பணிமனை, வடமராட்சி தெற்கு—மேற்கு]

மரம்தான்
எல்லாம்
மரம்தான்
இதனால் இவன் வாழ்வில்
மறந்தான்
எல்லாம்
மறந்தான்

- கரவை சுபா -

(கவிஞர் வைரமுத்துவின் கவிதையினைத் தழுவி எழுதப்பட்டது)

"சுதர்ஸனம்" மரம் வளர்ப்புத் திட்டத்தைப் பற்றிய சில தகவல்கள்:

- கடந்த ஆண்டில் உருவாக்கப்பட்டது
- 4 ஏக்கர் பரப்பில் தேக்கு, சவுக்கு, புளி, ஆல், வெள்வேல், வேம்பு, பூவரசு மலை வேம்பு, இப்பிலிப்பில் முதலான மரங்கள் நாட்டப்பட்டுள்ளன
- இரண்டு ஆண்டுகளில் பூர்த்தியாகும்.

நன்றி:- பிரதேச செயலர் பணிமனை,
வடமராட்சி - தெற்கு - மேற்கு

சிறப்பு மலர் வெளியீட்டு உதவி;
**அபிராம் அச்சகம், புலோலி.**

## இப்பட்டமளிப்புக் குறித்து.

இன்றுள்ள போர்க்கால சூழ்நிலையில் சூழல் மாசடைதலும், விறகுத் தட்டுப்பாடும் நாம் முகம் கொள்ளும் பிரச்சினைகள். மாதம் மும்மாரி பொழிந்த ஒரு காலம் இருந்ததாக அறிகிறோம். அதன் யதார்த்தம் மரங்களே.

வெயில் காலம், வல்லைவெளி அனலாய்க் கொதிக்கும். அவ்வேளை ஆற இடம் கிடைப்பது ஆலயத்தருகே படர்ந்திருக்கும் மருதமரம்தான். இப்படியே எல்லா இடமும் இருந்தால் வல்லைவெளி எப்படி இருக்குமென நான் எண்ணியதுண்டு.

இப்போது தான் அது நிதர்சனமாய் முளைவிடுகிறது. மில்க்வைற் நிறுவனம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், பேக்கரி உரிமையாளர் சங்கம் ஆகியவற்றின் வரிசையில் சுதர்ஸனம் மரம் வளர்ப்புத் திட்டம் தோற்றியிருக்கிறது.

யார் இதனைச் செயற்படுத்துகிறார்கள்? என்ற எனது வினாவுக்கு நெல்லியடி நண்பர் ஒருவர் பதில் தந்தார்.

இது ஒரு தனிமனித முயற்சி. வரவேற்க வேண்டியதும், மேலும் வளர்க்க வேண்டியதுமாகும். அது வளர்கிறது மேலும் வளரும். அதை வளர்த்தவரை நாம் பாராட்டாமல் விடலாமா?

அதனால் அவருக்கு "இயற்கை நேசன்" எனும் பட்டத்தை எமது நிறுவனம் மூலம் வழங்கத் தீர்மானித்தோம். அத்தீர்மானம் எதிர்வரும் 20ஆம் திகதி செயலாய் மலர்கிறது.

இந்த வேளையில் மலர் வெளியீட்டை மேற்கொள்ளும் அபிராம் அச்சகத்தினருக்கும், மலருக்கு ஆசிகள் தந்த பெரியோர்க்கும், விழாச் சிறப்புற உதவுவோருக்கும் எமது நன்றிகள்.

நன்றி.

தங்கள் சேவையிலுள்ள,
சு. ஸ்ரீகுமரன்

முத்தமிழ் மன்ற நூலகம்.
முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம்.

## மாபெரும் போட்டி நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும்

இடம்: யா/வட. இந்துமகளிர் கல்லூரி
காலம்: **20 - 02 - 1994** ஞாயிறு

### போட்டி நிகழ்ச்சிகள்

நேரம்: முற்பகல் 9 மணி

விநாயகர் தர்ம நிதியம் நடத்தும்
விஞ்ஞான வினாடி வினா போட்டி
"சுதர்ஸனம்" மரம் வளர்ப்புத் திட்ட நிர்மாணிகள் நடத்தும்
* நாவன்மைப் போட்டி *

நடுவர் குழு:
தலைவர்:
திருமிகு பாரிமகன்
(பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் வடமராட்சி செயலக நிர்வாகம்)
முதன்மை நடுவர்கள்:
திருமிகு தி. தவபாலன்
திருமிகு விவேக்
(இதழியல் ஆசிரியர், சாவரம்)
திருமிகு இர. சந்திரசேகரசர்மா
(பொறுப்பாளர், நல்லொழுக்கம், சுற்றாடல் பாதுகாப்பு, "போரூட்", பருத்தித்துறை)

### பரிசளிப்பு விழா

நேரம்: பிற்பகல் 3மணி

★ தலைவர்:
திருமிகு சு. ஸ்ரீகுமரன்
(தலைவர், முத்தமிழ் மன்ற நூலகம் முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம்)
★ மங்கள விளக்கேற்றல்:
திருமிகு பழநிமுத்து
(பொறுப்பாளர், கலை, பண்பாட்டுக் கழகம் வடமராட்சி)
★ பரிசில் வழங்கல்:
திருமிகு ஆ. இதயன்
(பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, யாழ். மாவட்டம்)

### பட்டமளிப்பும் கௌரவிப்பும்

"சுதர்ஸனம்" மரம் வளர்ப்புத்திட்ட நிர்மாணி
திரு. மா. கனகராசா
அவர்களுக்கு
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர்
திருமிகு செ. ஸ்ரீநிவாசன் அவர்களால்
"இயற்கை நேசன்"
என்னும் பட்டம் சூட்டப்படும்

விநாயகர் தர்ம நிதிய நிறுவனர்
திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை அவர்களுக்கு
கரவை கலை, இலக்கிய வட்டத் தலைவர்
கவிமாமணி மன்னவன்
கந்தப்பு அவர்களால்
பொன்னாடை போர்த்தப்பட்டு
கௌரவிக்கும்
நிகழ்வும் இடம் பெறும்.

### கலை நிகழ்ச்சிகள்

நேரம்: பிற்பகல் 3-30 மணி

தமிழீழப் பகுதி எங்கும் தனது பேராற்றலினால்
மக்கள் மனங்களைக் கவர்ந்த
ஈழத்துச் சதன் வழங்கும்
பல்குரல் - பல்சுவை - நகைச்சுவை
**நிகழ்ச்சி**
(இந்த நிகழ்வு ஒரு மணி நேரம் இடம்பெறும்)

கணபதி பாலர் பாடசாலை, சதாவதானி கதிரவேற்பிள்ளை ஐக்கிய நாணய சங்க பாடசாலை மாணவர்கள் அளிக்கும்
செல்வி க. சகுந்தலாதேவியின் நெறியாள்கையில்
"இழப்புக்கள்"
(நாடகம்)
"மாவீரர் புகழ் பாடுவோம்"
(நாட்டிய நாடகம்)
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக வடமராட்சிப் பிரிவினர் வழங்கும்
**வில்லிசை**

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்!

(நிகழ்ச்சிகள் ஆரம்பமாகுவதற்கு சிலநிமிடங்கள் முன்னராகவே கூடத்திற்கு வந்து ஒத்துழைக்குமாறு ரசிக உள்ளங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.)

முத்தமிழ் மன்ற
நூல் நிலைய நிர்வாகத்தினர்,
முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்பதிகாரி லக்கி அல்கம

மட்டக்களப்பு, திருமலை மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இராணுவ தலைமை நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம நியமிக்கப்பட்டிருக்கிறார்.

உள்ளூராட்சித் தேர்தல்களில் அரசுக்குள்ள அக்கறையை இந்த நியமனம் எடுத்துக் காட்டுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [இ-ள]

# மரண அறிவித்தல்கள்

## செல்வி கார்த்திகா சிவகுமாரன்

செல்வி கார்த்திகா சிவகுமாரன் காலமாகிவிட்டார். இவர் சிவகுமாரன் (இலங்கை வங்கி யாழ்ப்பாணம்) வினோதினி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் அராலியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்துரை தம்பதிகளினதும் ஏழாலையைச் சேர்ந்த நடராசா தம்பதிகளினதும் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரது அந்திமக் கிரியைகள் இன்று (14-2-94) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்:
சி. சிவகுமாரன்
(தந்தை)

332, சேர் பொன் இராமநாதன் றோட்,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (29435)

## விஸ்வர் இராஜா
(மலேயன் பென்சனியர்)

தெல்லிப்பழை (விராண்கட்டை) பிறப்பிடமாகவும் மல்லாகத்தை இருப்பிடமாகவும் கொண்ட விஸ்வர் இராஜா 13-02-94 இல் காலமானார்.

இவர் இராஜமணி (யாழ். கல்வித்திணைக்களம்), உருக்குமணிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-02-94 இல் மல்லாகத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி அறியத்தருகிறோம்.

தகவல்:
இ. இராஜமணி
(மகள்)

கோட்டடி றோட்,
மல்லாகம். (29434)

## சி. குணரெத்தினம்
(வருமானவரித் திணைக்களம்)

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மட்டக்களப்பை வதிப்பிடமாகக் கொண்டவருமாகிய சி. குணரெத்தினம் மட்டக்களப்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையா - சின்னம்மா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை [ஆசிரியர்], இரத்தினபூபதி தம்பதிகளின் அருமை மருமகனும், கௌரிதேவியின் அன்புக் கணவரும், தெய்வேந்திரி [கல்விக்கழகம், மட்டக்களப்பு], கமலினி [வைத்திய பீடம் யாழ். பல்கலைக்கழகம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி, நடராசா [சின்னத்துரை], மாணிக்கம் [புடவை கைத்தொழில் திணைக்களம்], சரஸ்வதி, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பேபி, சரஸ்வதி, கமலாதேவி, சிவகுரு, பரமலிங்கம், ஸ்ரீகுகன் [நீர்ப்பாசனத் திணைக்களம், மட்டக்களப்பு], ஸ்ரீஸ்கந்தன் [பிரான்ஸ்], ஸ்ரீபகவான் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-2-94 ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் மட்டக்களப்பு கள்ளியங்காடு மயானத்தில் நடைபெற்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
சி. கந்தசாமி

பரவைக் குளம், சிவன் வீதி,
திருநெல்வேலி. [29347]

## திருமதி சரஸ்வதி அருணாசலம்

விடத்தற்பளை, உசனைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி அருணாசலம் 13-2-94 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும், ஜெகநாதன் [V. M. ஸ்ரூடியோ பிறதேர்ஸ் - யாழ். கொழும்பு], காலஞ்சென்ற ஜெகராஜா மற்றும் ஜெகசோதி [ஆசிரியை, விடத்தற்பளை], ஜெகதீஸ்வரன், ஜெகபாலேந்திரன், ஜெகபூவரஞ்சிதம், ஜெகசீலன், ஜெகநீசன், ஜெயந்தி, ஜெகதா, ஜெகறட்சனா, ஜெகதாரணி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜகுலேந்திரன், மனோகரன், மஞ்சுளா, மங்கையர்க்கரசி, சறோஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிசாந்தன், மொனிஜா, திலுஜா, கார்த்திகா ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று [14-2-94] திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
அ. ஜெகநாதன்
[மகன்]

விடத்தற்பளை,
மிருசுவில். [29438]

## கவிரியேல்பிள்ளை யோக்கின்பிள்ளை

நாவலர் வீதியை வதிப்பிடமாகக் கொண்ட யோகி என அன்பாக அழைக்கப்படும் கவிரியேல்பிள்ளை யோக்கின்பிள்ளை (ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்) 13-2-94 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பிரான்சிஸ்காவின் அன்புக் கணவரும், சாந்தி, ராஜன் (ஜேர்மனி), ஜெயந்தி (ஆசிரியை சென் யோன் பொஸ்கோ வித்தியாலயம்), வசந்தி (திருகோணமலை), அன்ரன் (யாழ் தபாலகம்), எட்மன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சேவியர் (லக்கி ரேடேர்ஸ்), செல்வானந்தன் (ஊற்றன் நடனக் கல்வி மன்னார்), ராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தெனுஜா, தெஜி, சேகா, வியான்லி, அஜித் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அன்ரன் கமிலெஸ்
(மகன்)

425 (795), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (29439)

# தமிழைக் காப்பாற்றுவதற்கு உடன் செயலில் இறங்குவோம்

## கலந்துரையாடலில் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

தமிழ் இனம் தாக்கப்படுவதற்கு முன் தமிழ் மொழிதான் தாக்குதலுக்கு உள்ளானது. எமது மொழியில் வழக்கில் உள்ள சொற்களில் நூற்றுக்கு 70 விழுக்காடு பிறமொழிக் கலப்புடையவாகும். பல பிற மொழிச் சொற்கள் தமிழை ஆக்கிரமித்துள்ளன. இப்படியே போனால் தமிழ் மொழி அழிந்துவிடும்.

எனவே—

எமது மொழியை அழிக்க முடியாது என இனிமேலும் வீண் வீம்பு பேசிக்கொண்டிருக்காமல் உடனடியாக தமிழ் மொழியை காப்பாற்றும் நடவடிக்கைகளில் நாம் இறங்க வேண்டும்.

இவ்வாறு கூறினார் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன்.

தூய தமிழ் உபயோகம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நேற்று கோண்டாவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. யாழ் நகரில் வெளியாகும் நாளிதழ்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் ஆசிரியர்களும், வர்த்தகர் சங்கப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். அங்கு உரையாற்றிய போதே திரு. இளங்குமரன் இவ்வாறு குறிப்பிட்டார். கலந்துரையாடலுக்கு யாழ். மாவட்ட உதவி அரசியல் பொறுப்பாளர் இளையவன் தலைமை வகித்தார்.

எமது போராட்டம் எமது இனத்தையும், மொழியையும், பாதுகாக்கும் நோக்குடனேயே ஆரம்பிக்கப்பட்டது. எமது மண் காக்கப்படும் என்பதிலும், ஆட்சி மீட்கப்படும் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் நாம் அமைக்கும் ஆட்சியில் தமிழ் அரியணை ஏற வேண்டும் நாம் பெறப்போகும் தமிழீழத்தில் தூய தமிழ் அரியணை ஏறவேண்டும். அதற்கான சகல அடித்தள நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றை வேகப்படுத்த உங்களின் ஒத்துழைப்புத் தேவை— என்று குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

நாம் தமிழ் பேசியதால் தான் எமது போராட்டமே ஆரம்பமானது. இங்கு ஆங்கிலம் பேசாததாலேயே நாம் ஒடுக்கப்பட்டோம். எமது மண்ணைக் காக்கவும், ஆட்சியை மீட்கவும் எதிரியுடன் போராடுகிறோம்.

தமிழைக் காப்பதற்கு, அதன் தூய்மையைப் பேணுவதற்கு தமிழர்கள் ஒவ்வொருவரும் தம்முடனேயே நாம் போராடவேண்டும், காலம், ஆங்கில மாற்றங்களால் தமிழ் கலப்புற்று விட்டது. அதன் தூய்மையைப் பேணி ஏனைய உலக மொழிக்கு நிகராக வளர்க்கவேண்டும்.

இந்தப் பணியை மக்களுடன் நெருக்கமாக உறவாடும் இதழியலாளர்களும், வாணிபர்களும் முன்நின்று செய்து ஏனைய மக்களும் தமிழுணர்வு பெற உதவவேண்டும் என விரும்புகிறோம்— என்றார்.

வாணிப நிலையங்களின் பெயர்களை தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றவேண்டும் என்று கருத்தரங்கில் முடிவாகியது. தூய தமிழ்ப் பெயர்களை கொண்ட அகரவரிசை வழிகாட்டி ஒன்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் வெளியிடப்படும். அது வெளிவந்த மூன்று மாதங்களுக்குள் வாணிப நிலையங்களுக்கு தூய தமிழ்ப் பெயர்களைச் சூட்டுவதென வர்த்தகர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

நாளிதழ்கள், சஞ்சிகைகள், இதழ்கள் மூலம் தூய தமிழ்ச் சொற்களை அறிமுகப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (அ-9)

# கருணாநிதி சங்கடத்தில் மாட்டிக் கொண்டார்

## கோபால்சாமி கூறுகிறார்

சென்னை, பெப். 14

ஜெயின் கமிஷனிடம் விடுதலைப் புலிகள் பற்றி தான் சொன்ன விஷயங்கள் வெளியாகி விட்டதே என்ற சங்கடத்தில் கருணாநிதி பூமிக்கும், வானத்துக்கும் குதிக்கிறார். கருணாநிதி தமிழ் இனத்துக்கு செய்த துரோகம் ஜெயின் கமிஷனிடம் விடுதலைப் புலிகளைப் பற்றிக் கூறியதாகும்.

இவ்வாறு திரு. வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்:

ஜெயின் கமிஷனிடம் கூறிய கருத்துக்கள் வெளியாகி விடும் என்று கருணாநிதி எதிர்பார்க்கவில்லை. அதனால் தான் அவர் இப்படி ஆத்திரப்படுகின்றார்.

திரித்துச் செய்திகள் வெளியிட்டதாகக் கூறப்படும் பத்திரிகைகள் மீது வழக்குத் தொடர கருணாநிதி தயாரா?

இப்படி கோபாலசாமி சவால் விடுத்தார். [த]

# புத்தகக் கல்வி மட்டும் கல்வி வளர்ச்சி ஆகாது

## கல்வி அதிகாரி உரை

வல்வெட்டித்துறை, பெப் 14

"ஒரு பாடசாலையின் கல்வி வளர்ச்சி என்பது வெறுமனே புத்தகக் கல்வி மட்டும் அல்ல; இணைப் பாடவிதான நடவடிக்கைகளில் மாணவரை முழுமையாக ஈடுபடுத்துவதும் அவசியமாகும்"

அச்சுவேலி மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. க. இராசதுரை தலைமையில் விழா நடைபெற்றது.

திரு. பொ. வீரபத்திரன் மேலும் கூறியதாவது;

இக் கல்லூரி தற்போது முழு நேரமும் செயற்பட்டு வளங்களை உச்சப் பயன்பாடு அடையச் செய்கிறது. பரிசளிப்பு விழாவில் நூற்கல்விச் செயற்பாடுகளுக்கு மட்டும் அன்றி சகல இணைக் கலைத்திட்ட நடவடிக்கைகளுக்கும் பரிசு வழங்கப்பட்டது. இது பாராட்டுக்குரியது—என்றார்.

திரு. வீரபத்திரன் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். (க-155)


## குகன் அச்சகம்

தெல்லிப்பளை

1994-02-07 தொடக்கம் அச்சக ஒழுங்கை கொக்குவில் என்னும் இடத்தில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்

இல 54, அச்சக ஒழுங்கை,
கொக்குவில். (29481)



அம்பிகை துணை

ஆனைக்கோட்டை அருள்மிகு

## ஸ்ரீ கண்ணகை அம்பாள் தேவஸ்தானம் மாசி மக இலக்ஷார்ச்சனை விஞ்ஞாபனம் - 1994

ஆரம்பம்: இன்று (14-12-94) திங்கட்கிழமை
பூர்த்தி: 25 02-94 வெள்ளிக்கிழமை

தினமும் காலை
8-00 மணி ஸ்நபன அபிஷேகம்
9 00 மணி மூலமூர்த்தி பூஜை
9-15 மணி நியாசங்கள் தீபாராதனை
9-30 மணி நவசக்தி அர்ச்சனை
10 00 மணி ஹோமம் - பிரதட்சண நமஸ்காரம்
வேதபாராயணம் - தேவாரபாராயணம்
10 30 மணி திருவருட் பிரசாதம் வழங்கல்

ஒரு நாமம் ஒரு உருவம் ஒன்றும் இல்லாத தேவிக்கு ஆயிரம் ஆயிரம் நாமங்களால் செய்யப்படும் அர்ச்சனையையும், விசேட ஹோமத்தையும் தரிசித்து உய்தியடைய வேண்டுகின்றோம்.

வணக்கம்.

— திருப்பணிச் சபை

(29420)


## ஜெலலிதா அரசுக்கு.,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டு நிலைமையின் கடுமையைத் தாம் உணர்ந்திருப்பதாகவும் —

மக்களின் கவலையைத் தாம் புரிந்து கொண்டிருப்பதாகவும் —

தக்க தருணத்தில் தாம் நடவடிக்கை எடுக்கத் தயங்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை மோசமாகி வருவதையும் —

விடுதலைப் புலிகள் அதிகமாக ஊடுருவி வருவதையும்—

தற்போதைய தலைமையின் அனுபவமின்மையையும் மதிய அரசு கூர்ந்து கவனித்து வருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அரசியல் பயிற்சியோ, அனுபவமோ இன்றி ஜெயலலிதா முதலமைச்சராவதையே ஆளுநர் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

சர்தார் வல்லபாய்பட்டேல், நேதாஜி, பண்டித் நேரு போன்ற மாபெரும் தலைவர்கள் கூட நகராட்சித் தலைவர்களாகத்தான் அரசியலில் புகுந்தார்கள் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

நீலகிரி வேர வழக்கில் அ. தி. மு. க. ஆட்சிக்குப் பாதகமான தீர்ப்பை வழங்கிய நீதிபதி ஏ. ஆர். லட்சுமணனின் மருமகன் ஏ. ஆர். குமார் மீது கஞ்சா வைத்திருந்ததாக பொய் வழக்குப் போடப்பட்டது குறித்து ஆளுநர் கோபமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

'எல்லாருக்கும் கல்வி' என்ற கொள்கையை விளாதிக்க புதுடில்லியில் நாளை நடக்கும் முதலமைச்சர் மாநாட்டைப் பயன்படுத்திக்கொண்டு, ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவைச் சந்திக்க முயல்கிறார் என்று பி. பி. ஸி தெரிவித்தது. (டெ-எ)

# தமிழரின் ஏகப்பிரதிநிதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் முன் வைக்கும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கன அவர் என்று கூறியதாகவும் "புலிகளின் குரல்" அறிவித்தது.

தமிழ்ப் பகுதிகளில் தங்கியிருந்து இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மற்றும் யுத்த நெருக்கடியால் அல்லற்படும் மக்களையும் தாங்கள் நேரில் சந்திக்க முடிந்தது என்றும் —

இவர்களின் வாழ்க்கைத் தரம் ஸ்ரீலங்காவில் வாழும் மக்களின் தரத்துடன் ஒப்பிடும் போது மிகவும் கவலை தருவதாக உள்ளதாகவும் ஆயர் கெனத் மேலும் கூறினார்.

தமது நல்லெண்ண முயற்சிகளை இயன்றளவு விரைவாக மேற்கொள்ளவும் தாம் முயற்சிப்பதாகவும் —

அனைத்து மக்களும் சமாதானத்தையே விரும்புவதால் அதனை அடைய நாம் முயற்சிக்க வேண்டும் என்றும் —

அதுவே தமது நல்லெண்ண முயற்சியின் நோக்கம் என்றும் — அவர் மேலும் குறிப்பிட்டார். [உ-8]


# இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14ஆவது இசை விழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

## மூன்றாம் நாள் - இன்று

தெல்லிப்பளை, அளவெட்டி, மல்லாகம் ப. நோ. கூ. சங்க ஆதரவில்

மாலை

**4-30 — 5-00** மங்கள இசை
உதயநாதன், ஆர். கோவிந்தராஜா, கே. சண்முகரத்தினம், ஆர். சிவகுமார், எஸ். தில்லைநாதன் — நாதஸ்வரம்
எ. சிவகுமார், கே. மோகனதாஸ், என். அம்பிகைபாகன், கே. ராஜன், கே. நாகேந்திரம் — தவில்

**5-00 — 5-10** மிருதங்க இசை
கே. கோபு, ஜே. ஆர். அரன், எம். முரளீதரன்

**5-10 — 5-30** பாட்டு
பாலகௌரி யோகமணி, சுபாஷினி மயில்வாகனம், ரோகிணி அருளையா, தாட்சாயனி சிவஞானம் — பாட்டு
கே. சுபத்திரா — வயலின்
எஸ். ஹரிதரன் — மிருதங்கம்

**5-30 — 5-50** புல்லாங்குழல்
கே. விஜயதாஸன், எம். விஜேந்திரன் — புல்லாங்குழல்
என். சர்வேஸ்வரசர்மா — வயலின்
என். நாகராஜன் — மிருதங்கம்

**5-50 — 6-10** பாட்டு
கு. சுபிதா, தி. கீதா, இ. அஷ்டலக்ஷ்மி, கோ. கமலாஜோதி, சி. சறோஜினி, கு. லொய்க்களிசியா
ச. சுஜித்திரா — வயலின்
ப. ரதிரூபன் — மிருதங்கம்

**6-10 — 6-30** வயலின் இசை
க. சுகன்யா, ச. சுஜித்திரா, கு. சுமித்தா, ரா. ஜமித்திரா, த. சந்தானலக்ஷ்மி, சி. கலைவாணி, பாமினி வஸ்தலா, சி. அகிலன், ந. ரமணன்
சதா வேல்மாறன் — மிருதங்கம்

**6-30 — 7-00** பாட்டு
ராஜஸ்ரீ பசுபதீஸ்வர சர்மா — பாட்டு
சுபத்திரா கணேசன் — வயலின்
பி. ரதிரூபன் — மிருதங்கம்

**7-00 — 7-30** மங்கள விளக்கேற்றல்
1. திரு. செல்வராஜா (பொதுமுகாமையாளர், தெல்லிப்பளை எம். பி. சி. எஸ்.
2. திரு. க. சிவபாலன் (கே. கே. கே. வர்த்தகர்)
3. திரு. இ. இராமநாதன் (பாலா)
4. திரு. A. G. செல்வராஜா (வர்த்தகர்)
5. பிரம்மஸ்ரீ வெ. ரகுநாதஐயர்

தலைவர்:
திரு. நா. தவநாதன் (தலைவர், ப. நோ. கூ. சங்கம்)

பிரதம விருந்தினர்:
திரு. நா. சுப்பிரமணியன் (முதுநிலை விரிவுரையாளர். தமிழ்த்துறை)

சிறப்பு விருந்தினர்:
திரு. ப. கனகரத்தினம் (அளவெட்டி, ப. நோ. கூ. ச.)

**7-30 — 8 30** இசைக்கச்சேரி
வி. சிவஞானசேகரம் — பாட்டு
வி. கே. குமாரசாமி — வயலின்
கே. கஜன் — மிருதங்கம்
ரி. தபோதநாயகம் — கடம்

**8-30 — 9-30** கதகளி ஆடல்
"கலைக்கோயில்"
வேலானந்தன் ஆடல் மன்றம்

கலா ரஸிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்:
வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்
97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். [B-7521]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-02-1994 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org